FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | கணக்கீடு I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :....................................

- *01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் உரித்தாகும்.*
- *உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.*

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

agaram.lk

01) வணிக அலகு தொடர்பில் அக்கறை காட்டும் பிரிவினர்களும், அவ்வாறு அக்கறை காட்டுவதற்கான காரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| பிரிவினர் | அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் |
|---|---|
| 1. ஊழியர்கள் | (A) பொறுப்பு உத்தரவாதத்தை நிறைவேற்ற சிறந்த நிலைப்பாடு வணிகத்துக்கு உள்ளாதா? |
| 2. அரசு | (B) எதிர்கால உற்பத்தி தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளல் |
| 3. முகாமையாளர் | (C) தேவையான அறிக்கைகள் உரியவாறு சமர்ப்பிக்கப் படுகின்றதா? |
| 4. வாடிக்கையாளர் | (D) முதலீட்டுக்கு ஏற்ற அனுகூலங்கள் காணப்படுகின்றதா? |
| 5. உரிமையாளர் | (E) தொழில்பாதுகாப்பு காணப்படுகின்றதா? |

மேலே தரப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் வணிக அலகின் மீது அக்கறை காட்டுவதற்கான காரணங்களை ஒழுங்கு முறையாக காட்டும் விடை எது?

1) E, C, B, A, D  2) A, B, C, D, E  3) E, D, C, B, A
4) B, C, D, E, A  5) E, D, B, A , C  (.........)

02) துளசி வணிகத்தின் 2018. 04. 01 இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலில் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

வங்கிக்கடன் பெறுதல் 120, 000
காசுக்கு கொள்வனவு 80, 000

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினைச் சரியாக காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) சொத்து அதிகரித்தல் ரூ 120, 000 - பொறுப்புக்குறைவடைதல் 120, 000
2) சொத்து அதிகரித்தல் ரூ 120, 000 பொறுப்பு அதிகரித்தல் ரூ 120, 000
3) சொத்து அதிகரித்தல் ரூ 200, 000 பொறுப்பு அதிகரித்தல் ரூ 200, 000
4) சொத்து குறைவடைதல் ரூ 200, 000, பொறுப்பு அதிகரித்தல் ரூ 200, 000
5) சொத்து அதிகரித்தல் ரூ 200, 000 உரிமை அதிகரித்தல் ரூ 200, 000  (.........)

03) வரையறுத்த அப்ரா வணிகத்தின் விற்பனைப் பட்டியலில் இருந்து (இன்வொய்ஸ்) பிரித்தெடுக்கப்பட்ட தகவல் வருமாறு,

| **திகதி** | **வாடிக்கையாளர்** | **பெறுமதி (ரூ 000)** |
|---|---|---|
| 2018. 06. 05 | அப்றித் கம்பனி<br>10% வியாபாரக் கழிவு | 800<br>(80)<br>720 |
| • நிபந்தனை : ஒரு மாதத்தினுள் பணம் செலுத்தப்படுமாயின் 10 % காசுக் கழிவு கிடைக்கும். | | |

வரையறுக்கப்பட்ட அப்ரா கம்பனி மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பணத்தினை 2018.06.15 இல் பெற்றுக்கொண்டது. இக் கொடுக்கல் வாங்களிலால் ஏற்பட்ட காசுக் கழிவினை அப்ரா கம்பனி ஏட்டில் பதிவதற்கான சரியான இரட்டைப் பதிவு.

| | **வரவு** | | **செலவு** | |
|---|---|---|---|---|
| 1) | கொடுத்த கழிவு கணக்கு | 80 | கடன்படுநர் கட்டுப்பாடு கணக்கு | 80 |
| 2) | கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக்கணக்கு | 80 | பெற்ற கழிவுக் கணக்கு | 80 |
| 3) | கொடுத்த கழிவுக்கணக்கு | 72 | கடன்படுநர் கட்டுப்பாடு | 72 |
| 4) | கடன்படுநர் கட்டுப்பாடு | 72 | கொடுத்த கழிவு | 72 |
| 5) | பெற்றகழிவுக் கணக்கு | 72 | கடன்கொடுநர் கட்டுப்பாடு | 72 |

(……….)

❖ **4ம், 5ம் வினாக்களுக்கு விடையளிக்குக. கீழ்வரும் தகவல்களை கருத்தில் கொள்க.**

வணிகமொன்றின் 2018.03.31 ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பேரேடுகளில் காணப்படும் கணக்குகளை பயன்படுத்தி கணக்கிடப்பட்டுள்ள தேறிய இலாபம் ரூ 125, 000 ஆகும். பின்னர் மேற்கொண்ட தேடல்களின் பின் கீழ்வரும் வழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

A - ரூபா 40, 000 பெறுமதியான விற்பனைப் பட்டியலொன்று ஏடுகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.

B - கொள்வன நாட்குறிப்பேட்டின் கூட்டுத் தொகை ரூ 10000 குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது. (கட்டுப்பாட்டு கணக்கினை பேணும் நிறுவனம்)

C - வியாபார வருமதிகளின் மதிப்புக் குறைப்பு நட்டக் கணக்கு ரூ 5000 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.

04) மேலுள்ள வழுக்கள் திருத்திய பின் சரியான தேறிய இலாபமாக அமைவது,

1) ரூ 165 000 2) ரூ 110 000 3) ரூ 155 000

4) ரூ 180 000 5) ரூ 150 000 (……….)

05) மேலுள்ள வழுக்களில் தொங்கல் கணக்கு உருவாக காரணமான வழு / வழுக்கள் ஆனது.

1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும்

4) A, B மட்டும் 5) மேலுள்ள அனைத்தும் (……….)

agaram.lk

06) வணிகம் ஒன்று மேற்கொண்ட கடன் விற்பனை தொடர்பான தகவல்கள் வருமாறு, மொத்தக் கடன் விற்பனையின் பட்டியல் விலை ரூ 400, 000, விற்பனை மீதான வியாபாரக் கழிவு 10% விற்பனை விலையில் 20% பெறுமதி சேர்வரி சேர்க்கப்பட்டதாகும். பின்வரும் கணக்குகளில் காட்டத்தக்க சரியான தொகைகளைக் கொண்ட தொகுதியினை தெரிவு செய்க.

| | விற்பனை | கடன்படுநர் கட்டுப்பாடு | பெறுமதி சேர்வரி |
|---|---|---|---|
| 1) | ரூபா 400 000 | ரூபா 432 000 | ரூபா 32 000 |
| 2) | ரூபா 360 000 | ரூபா 360 000 | ரூபா 72 000 |
| 3) | ரூபா 360 000 | ரூபா 432 000 | ரூபா 72 000 |
| 4) | ரூபா 300 000 | ரூபா 360 000 | ரூபா 60 000 |
| 5) | ரூபா 352 000 | ரூபா 432 000 | ரூபா 80 000 |

(………)

07) கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை கடன்படுநர் பேரேட்டு பட்டியல் மீதியுடன் ஒப்பிட்ட போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

* காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டில் கடன்படுநர் பெறுவனவு நிரலில் ரூபா 4000 மிகையாக கூட்டப்பட்டிருந்தது.
* கடன்படுநர் தனிநபர் கணக்கு மீதி பட்டியலில் ரூபா 1000 குறைவாக பதிவிடப்பட்டிருந்தது.

பின்வருவனவற்றில் சரியான சீராக்கத்தினைக் காட்டுவது எது?

| | கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | காசுக்கட்டுப்பட்டு மற்றும் | கடன்படுநர் பட்டியல் |
|---|---|---|---|
| 1) | ரூபா 4000 வரவு வைத்தல் | ரூ 4000 செலவு வைத்தல் | ரூ 1000 கூட்டுதல். |
| 2) | ரூபா 4000 செலவு வைத்தல் | ரூ 4000 வரவு வைத்தல் | ரூ 1000 குறைத்தல். |
| 3) | ரூபா 4000 செலவு வைத்தல் | ரூ 4000 வரவு வைத்தல் | ரூ 1000 கூட்டுதல். |
| 4) | ரூபா 4000 செலவு வைத்தல் | ரூ 4000 செலவு வைத்தல் | ரூ 1000 குறைத்தல். |
| 5) | ரூபா 4000 செலவு வைத்தல் | ரூ 4000 வரவு வைத்தல் | மாற்றம் இன்மை. |

(………)

08) வணிகம் ஒன்றில் 31.03.2018 இல் முடிவுற்ற வருடத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

01) ரூ 60 000 க்கு பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
02) ரூ 5000 வாடகை செலுத்தப்பட்டது.
03) ரூ 40 000 கிரயமான பண்டங்கள் ரூ 60 000 க்கு விற்பனை செய்யப்பட்டது.
04) வியாபார சென்மதியாளர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய ரூ 10 000 க்கு ரூ 9500 கொடுத்து கணக்குத் தீர்க்கப்பட்டது.

| | மொத்த வருமானம் | மொத்தச் செலவு |
|---|---|---|
| 1) | 205 000 | 105 000 |
| 2) | 60 500 | 45 000 |
| 3) | 60 000 | 45 000 |
| 4) | 60 000 | 40 000 |
| 5) | 60 000 | 60 000 |

(………)

agaram.lk

09) 31.03.2018 இல் வணிகமொன்றின் காசுக் கட்டுப்பட்டுக் கணக்கு மீதி ரூ 52 000 வரவு மீதியாகும். அத்தினத்தில் வங்கிக் கூற்றின் மீதி ரூ 90 000 ஆகும். வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு,

* பெற்ற பங்கு இலாபம் காசுக்கணக்கில் சீராக்கப்படாதவை ரூ 18 000.
* வைப்புச் செய்து தீர்வையாகாத காசோலைகள் ரூ 48 000.
* வைப்புச் செய்து மதிப்பிழந்த காசோலை ரூ 8000 காசுக்கணக்கில் சீராக்கப் படாதவை.

2018.03.31 இல் வணிகத்தால் வரையப்பட்டு இன்னமும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலை எவ்வளவு?

1) ரூ 60 000 2) ரூ 76 000 3) ரூ 62 000 4) ரூ 54 000 5) ரூ 138 000

(……….)

10) பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது வருமானக் கூற்றில் ஒவ்வொரு காலத்திற்குமான பெறுமானத் தேய்வினை இனங்காணுகின்றது?

1) அட்டுறு 2) தொடர்ந்து இயங்குதல் 3) இணைத்தல்
4) தேறல் 5) முன்னெச்சரிக்கை

(……….)

11) வணிகமொன்று தனது எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறைக் கணக்கின் ஊடாக மேற்கொள்கின்றது. 2019 ஜனவரி மாதத்துக்கான கணக்குப் புத்தகங்களின் படி காசுக் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்.

01.01.2019 காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 20, 000
31.01.2019 காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின் மொத்த தொகை ரூ 120, 000
31.01.2019 காசு கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் மொத்த தொகை ரூ 90 000

2019 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்றின் சுருக்கம் வருமாறு
01.01.2019 இல் மீதி ரூ 20 000
வசூலிக்கப்பட்ட காசோலைகள் - ரூ 100, 000
சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் - ரூ 75 000
நிலையான கட்டளை கடன் தவணைக் கொடுப்பனவு ரூ 5000
வருமதியாளர்களின் நேரடி வைப்பு ரூ 20 000
மாத ஆரம்பத்தில் மாற்றப்படாத, தீர்வையாத காசோலைகள் எவையும் இல்லை.
31. 01. 2019 இல் காசுக்கட்டுப் பாட்டுக் கணக்கின் சீராக்கிய மீதி.

1) ரூ 50 000 2) ரூ 25 000 3) ரூ 65 000 4) ரூ 10 000 5) ரூ 55 000

(……….)

12) வணிக நிறுவன மொன்றில் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பில் ஊழியருக்கு கொடுத்த தேறிய சம்பளம் ரூ 324 000 ஆகும். இத்தேறிய சம்பளமானது ஊழியர் சேமலாப நிதியத்துக்காக மொத்தச் சம்பளத்தில் 10% கழிக்கப்பட்டு கொடுத்த தொகையாகும். வணிகம் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு மொத்தச் சம்பளத்தில் 15% மும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% மும் பங்களிப்பு செய்கின்றது. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தில் ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு யாது?

1) ரூ 360 000 2) ரூ 414 000 3) ரூ 450 000 4) ரூ 424 800 5) ரூ 366 120

(……….)

agaram.lk

13) இம்ரான், பாண்டியன் பங்குடமை வணிகத்தின் 2018.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் நடைமுறைக் கணக்குகள் பின்வருமாறு,

| விபரம் | இம்ரான் | பாண்டியன் | விபரம் | இம்ரான் | பாண்டியன் |
|---|---|---|---|---|---|
| மீ/செ | 220 000 | 150 000 | 1/4/2017 மீதி | 80 000 | 60 000 |
| | | | சம்பளம் | 50 000 | 40 000 |
| | | | 10% மூலதனவட்டி | 30 000 | 20 000 |
| | | | இலாபம் | 60 000 | 30 000 |
| | 220 000 | 150 000 | | 220 000 | 150 000 |
| | | | மீ/வ | 220 000 | 150 000 |

பங்காளரிடையே பங்குடமை உடன்படிக்கை ஏற்படுத்தாது 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24ஆம் பிரிவின் படி இப்பங்குடமை வணிகம் செயற்படுமாயின் 31.03.2018 ல் முடிவடையும் வருடத்துக்கான பாண்டியனின் இலாபப்பங்கு எவ்வளவு?

1) ரூ 450 000 2) ரூ 70 000 3) ரூ 90 000 4) ரூ 115 000 5) ரூ 185 000

(………)

14) ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் 2017.03.31 நிதிநிலைமைக் கூற்றில் எடுக்கப்பட்ட விடயங்கள்.

| | |
|---|---|
| திரண்ட நிதி | 60 000 |
| (+) வருமான மேலதிகம் | 18 000 |
| | 78 000 |

31. 03. 2018 இல் காணப்பட்ட மொத்தச் சொத்துக்கள் ரூ 212 000 ஆகவும் திரண்ட நிதி தவிர்ந்த பொறுப்புக்கள் ரூபா 62 000 ஆகவும் காணப்பட்டது.

2018. 03. 31 இல் முடிவடைந்த நிதி வருடம் தொடர்பில் பின்வரும் தவறுகள் இடம் பெற்றன.

* கட்டிட விஸ்தரிப்புக்கு பெற்ற நன்கொடை ரூபா 20 000 வருமான செலவுக் கணக்கில் காட்டப்பட்டமை.
* 2019. 03. 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அங்கத்தவர்களால் செலுத்திய சந்தா ரூ 6000 வருமானமாக கணக்கிடப்பட்டது.

தவறுகள் திருத்திய பின் 31.03.2018ல் கழகத்தின் வருமான மிகை?

1) ரூ 46 000 2) ரூ 64 000 3) ரூ 124 000 4) ரூ 78 000 5) ரூ 44 000

(………)

❖ **15, 16 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

நர்மதா PLC இன் 31.03.2018 நிதிக் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு,

| | |
|---|---|
| ஆண்டுக்கான விற்பனை | ரூ 800 000 |
| விற்பனைக் கிரயம் | ரூ 300 000 |
| விற்பனை விநியோக செலவு | ரூ 50 000 |
| நிர்வாக செலவுகள் | 30 000 |
| மீள் மதிப்பீட்டு மிகை / பற்றாக்குறை | |
| நிலம் | 60 000 |
| மோட்டார் வான் | 100 000 |
| உபகரணம் | (75 000) |

agaram.lk

31.03.2018 இல் சகல ஆதனம் பொறி உபகரணங்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. நிலமானது முதலாவது தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், மோட்டார் வானும், உபகரணங்களும் இரண்டாவது தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மோட்டார் வான், உபகரணங்கள் முதல் தடவையாக 31. 03. 2016 இல் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட போது முறையே ரூ 30 000 பற்றாக்குறையும், ரூ 40 000 மிகையும் ஏற்பட்டுள்ளது. கம்பனியின் மொத்தச் சொத்துக்கள் உரிமையாண்மையால் நிதியிடப்பட்டுள்ளதுடன் கம்பனி வரிவிடுதலை காலத்தில் உள்ளது.

15) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான இந்தக் கம்பனியின் மொத்த வருமானம் மற்றும் மொத்த முற்றும் அடங்கிய வருமானம்.

| | **மொத்த வருமானம்** | **மொத்த முற்றும் அடங்கிய வருமானம்.** |
|---|---|---|
| 1) | 90 000 | 160 000 |
| 2) | 930 000 | 505 000 |
| 3) | 960 000 | 505 000 |
| 4) | 960 000 | 580 000 |
| 5) | 1000 000 | 160 000 |

(……….)

16) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான இக்கம்பனியின் இலாபம் மற்றும் ஏனைய முற்றும் அடங்கிய வருமானம்.

| | **இலாபம்** | **ஏனைய முற்றும் அடங்கிய வருமானம்** |
|---|---|---|
| 1) | 345 000 | 90 000 |
| 2) | 345 000 | 130 000 |
| 3) | 385 000 | 160 000 |
| 4) | 415 000 | 90 000 |
| 5) | 415 000 | 130 000 |

(……….)

17) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) க்கு பதிவு செய்யப்பட்டுள்ள வணிகமாகிய வரையறுக்கப்பட்ட சாலினி கம்பனி 2016. 04. 01 இல் 1725, 000 பெறுமதியான வாகனம் ஒன்றினைக் கொள்வனவு செய்துள்ளது. இப்பெறுமதியினுள் 15% VAT வரியும் உள்ளடங்கியுள்ளது இவ் வாகனத்தின் எஞ்சிய பெறுமானம் ரூ 50 000 ஆகவும், பயன்படு ஆயுட் காலம் 10 வருடங்கள் ஆகவும் மதிப்பீடு செய்யப்பட்டது.
LKAS – 16 (ஆதனம் பொறி மற்றும் உபகரணம்) நியமத்துக்கு அமைய 2018.03.31 இல் தேறிய பெறுமதி எவ்வளவு?

1) ரூ 12 00 000　　2) ரூ 12 10 000　　3) ரூ 13 65 00
4) ரூ 13 90 000　　5) ரூ 15 07 000　　(……….)

18) மாதவி, மைதிலி ஆகியோர் பங்குடமை வியாபாரம் ஒன்றினை நடாத்தி வருகின்றனர். கடன்வட்டி கழித்த பின் 2018.06.30 இல் முடிவடைந்த அரையாண்டில் தேறிய இலாபம் ரூ 80 000 ஆகும். பங்குடமை உடன்படிக்கையில் காணப்பட்ட விடயங்கள்.

- இலாப நட்ட விகிதாசாரம் - சமன்
- பங்காளர் கடனுக்கு செலுத்தும் வட்டி வீதம் - 5%

| **01.01.2018** | **மாதவி (ரூ)** | **மைதிலி (ரூ)** |
|---|---|---|
| மொத்த உரிமை | 670, 000 | 450, 000 |
| மூலதனக் கணக்கு மீதி | 600, 000 | 500, 000 |
| கடன் (செலவு) | - | 120, 000 |

கடன்வட்டி சென்மதியாய் உள்ளது. பற்றுக்கள் மாதவி ரூ 20, 000 மைதிலி ரூ 16000 மேற்படி தகவல்களுக்கு அமைய 2018.06.30 திகதியில் பங்காளர் நடைமுறைக் கணக்கின் மீதியானது.

| | **மாதவி** | **மைதிலி** |
|---|---|---|
| 1) | 70 000 | (50 000) வரவு |
| 2) | 90 000 | (23 000) வரவு |
| 3) | 110, 000 | (10 000) வரவு |
| 4) | 110, 000 | (6000) வரவு |
| 5) | 640 000 | 460 000 |

(……….)

agaram.lk

19) இலாப நோக்கமற்ற அமைப்பு ஒன்றின் வருமான மூலமொன்றாக கருதமுடியாத விடயம்.

1) அங்கத்தவர் சந்தா
2) ஆயுட் சந்தாவின் குறித்த காலத்திற்காக பதிவளித்த தொகை.
3) அங்கத்தவர் பிரவேசக் கட்டணம்.
4) பொது நன்கொடை.
5) நோக்கம் குறித்த சிறப்பு நன்கொடை. (……….)

20) LKAS – 17 (குத்தகை) இன் படி குத்தகைச் சொத்து நிதி நிலைமைக் கூற்றில் சொத்தாக வெளிப்படுத்தல் தொடர்பான பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவும், அதனுடன் தொடர்புடைய கணக்கீட்டுத் தகவல்களின் பண்புகள் சார் குணாதிசயமும்,

| | எண்ணக்கரு | பண்புசார் குணாதியம் |
|---|---|---|
| 1) | வரலாற்றுக் கிரய எண்ணக்கரு | விளங்கிக் கொள்ளக் கூடிய தன்மை. |
| 2) | தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம் | உண்மையான பிரதிநிதித்துவம். |
| 3) | தொடர்ந்து இயங்குதல். | ஒப்பிடக்கூடிய தன்மை. |
| 4) | அட்டுறு | காலந்தவறாமை. |
| 5) | தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம் | உறுதிப்படுத்தக் கூடிய தன்மை |

(……….)

21) வரையறுக்கப்பட்ட இளவேனில் கம்பனியின் நிதி வருடம் 2018.03.31 இல் முடிவடைகின்றது. இந் நிதியாண்டுக்கான நிதி அறிக்கைகளைத் தயாரித்து முன்வைப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட திகதி 2018.06.20 ஆகும். எனினும் வருடாந்த பொதுக்கூட்டம் 2018.06.30 எனத் தீர்மானிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் வணிகத்தில் இடம் பெற்ற நடவடிக்கைகளில் எது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள் (LKAS – 10) எனக் "கருத முடியாதது" எது?

1) 2018.04.08 இல் ஏற்பட்ட தீவிபத்துக் காரணமாக ரூபா 300, 000 கட்டிடம் அழிவடைந்துள்ளது.
2) 2018.03.05 இடம்பெற்ற கடன் விற்பனை தொடர்பில் வியாபார வருமதியாளர்களின் மதிப்புக் குறைப்பு நட்டம் 2018.06.03 இல் நீதிமன்றால் அறிவிக்கப்பட்டது.
3) 2018.03.31 இல் உள்ள இருப்புக்கள் 2018.05.20 இல் ரூபா 50000 நட்டத்தில் விற்கப்பட்டது.
4) 2018.03.31 இல் முடிவடைந்த கணக்காண்டில் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவர் கம்பனிக்கு எதிராக ரூபா 600, 000 கோரி தொடரப்பட்ட வழக்கிற்கு இழப்பீடு வழங்குமாறு 2018.06.25 இல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
5) 2018.03.31 இல் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூ 400 000 வரி மதிப்பீடானது இலங்கை சுங்கத்திணைக்களத்தால் 2018.05.05 இல் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது. (……….)

22) LKAS – 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்கபொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இற்கமைய நிதிநிலைமைக் கூற்றில் "ஏற்பாடாக" பின்வருவனவற்றுள் எது இனங்காணப்படும்?

A - ஐயக்கடன் ஒதுக்கம் செய்தல்.
B - பெறுமான தேய்வு ஒதுக்கம் செய்தல்.
C - உத்தரவாத கோரிக்கைக்கான ஏற்பாடு.
D - ஊழியரால் கோரப்படும் இழப்பீட்டுத் தொகையொன்றுக்கான ஏற்பாடு.

1) C, D மாத்திரம்    2) A, B மாத்திரம்    3) A, B, C மாத்திரம்
4) A, C, D மாத்திரம்    5) B, C, D மாத்திரம்    (……….)

agaram.lk

23) நிதிக் கணக்கீட்டின் எண்ணக்கரு மாதிரிச் சட்டகத்திற்கமைய 'வருமானம்' என்பதனை வரையறை செய்யும் போது பின்வரும் கூற்றுக்களில் சரியானது,

A - கணக்கீட்டுக் காலப்பகுதியில் சொத்துகளை உயர் மட்டத்துக்கு இட்டுச் செல்லும்.

B - கணக்கீட்டுக் காலப்பகுதியில் பொறுப்புக்கள் குறைவதற்கு காரணமாக அமையும்.

C - உரிமையாளரின் பங்களிப்பு இன்றி உரிமை அதிகரிப்பதற்கு காரணமாக அமையும்.

D - கணக்கீட்டுக் காலப்பகுதியில் பொறுப்புக்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமையும்.

1) AB  2) AC  3) CD  4) ABC  5) ACD  (……….)

24) வரையறுக்கப்பட்ட கம்பனியின் கணக்காண்டு முடிவுத் திகதியில் நடைபெற்ற நிகழ்வு தொடர்பாக பின்வரும் குணாம்சங்கள் உள்ளன.

A - இறந்த காலத்தில் நிகழ்ந்த பெறுபேறு காரணமாக நிகழ்காலத்தில் கடப்பாடு ஒன்று உண்டு.

B - அதனைத் தீர்ப்பதற்கு வணிகளின் வளங்கள் வெளியேறும் நிலைமை உண்டு.

C - ஏற்பாட்டுப் பெறுமதியை சாதாரணமாக மதிப்பிட முடியும்.

மேற்படி நிகழ்வினை (LKAS – 37) இற்கு அமைய எவ் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

1) பொறுப்பாக  2) ஏற்பாடாக  3) மதிப்பீடாக

4) உடன்பாட்டு ஒதுக்கமாக  5) நிகழத்தக்க பொறுப்பாக  (……….)

25) இணைப்பு விகிதங்களுக்கு அமைய நிதி நிலைமையை வியாக்கியானம் செய்வது பற்றி கீழே தரப்பட்டுள்ளன.

A - நிறுவனத்தில் மொத்த மூலதனத்தில் கடன் மூலதனம் என்ன பங்கு என்பதனை கடன் விகிதம் மூலம் கணிக்கலாம்.

B - நிறுவனத்தின் கடன் மூலதனம் உரிமை மூலதனத்தை விட அதிகமாயின் உயர் இணைப்பு உள்ள நிலைமையாகும்.

C - வட்டிப் பாதுகாப்பு விகிதம் குறைந்த பெறுமானத்தை கொள்ளுமானால் கடன் கொடுத்தோரின் பாதுகாப்பு உறுதியானதாகும்.

சரியான விளக்கத்தினை தருவது.

1) A மட்டும்  2) B மட்டும்  3) A மற்றும் B

4) A மற்றும் C  5) B மற்றும் C  (……….)

26) உற்பத்தி வணிகம் ஒன்று பல்வேறு உற்பத்தி பிரிவுகளும் மற்றும் சேவைப் பிரிவுகளும் தமக்குத் தேவையான பொருட்களை கோருவதற்காக தயாரிக்கப்படுவது.

1) விலை விசாரணை  2) விலைப்பட்டியல்  3) கொள்வனவுக் கட்டளை

4) பொருள் வேண்டுதல் பத்திரம்  5) கொள்வனவு வேண்டுதல் பத்திரம்  (……….)

27) நிறுவனமொன்று தனது உற்பத்தியில் செய்முறைக்காக AB எனும் மூலப்பொருட்களை கொள்வனவு செய்கின்றது. முதலாவது மாதம் முதல் 6 மாத காலத்தில் ஒவ்வொன்றும் ரூபா 50 படி 300 அலகுகளை கொள்வனவு செய்துள்ளது. அதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் ரூ 5 படி அலகுவிலையானது அதிகரித்தச் செல்லும் அலகுகளின் எண்ணிக்கை 500 ஆகும். ஒவ்வொரு மாதமும் உற்பத்திக்கென 400 அலகுகள் வீதம் வழங்கப்பட்டன. வருட இறுதியில் களஞ்சியத்தில் எஞ்சியுள்ள இருப்புக்களின் பெறுமதி யாது?

1) ரூபா 60 000  2) ரூபா 66 500  3) ரூபா 70 500

4) ரூபா 91 500  5) ரூபா 96 000  (……….)

28) மணலாறு உற்பத்தி நிறுவனமொன்று தனது உற்பத்தி ஊழியர்களுக்கு வெளியீட்டு அடிப்படையில் சம்பளத்தை வழங்குகின்றது. சுதா மற்றும் சிவா ஊழியர்கள் பற்றி தகவல்கள் தரப்பட்டுள்ளன.

* ஊழியர் ஒருவர் 8 மணித்தியாலத்தில் உற்பத்தி செய்ய வேண்டிய அலகுகளின் எண்ணிக்கை 50 அலகுகள்.
* அலகு ஒன்றிற்கு செலுத்துமதி ரூ 20 உற்பத்தி இலக்கினை அடைந்த பின்னர் அலகொன்றிற்கு ரூ 25.
* சுதா 8 மணித்தியாலத்தில் உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை 60 ஆகும்.

agaram.lk

* சிவா 8 மணித்தியாலத்தில் உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை 48 ஆகும். நிறுவனத்தின் இரு ஊழியர்களுக்கும் 8 மணித்தியாலத்திற்கு செலுத்துமதியான சம்பள கிரயமானது.

1) ரூ 2160  2) ரூ 2200  3) ரூ 2210  4) ரூ 2450  5) ரூ 2500

(……….)

29) சிக்கனம் கட்டளைத் தொகை (EOQ) தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது / எவை சரியானவை?

A - மொத்தக் கட்டளைக் கிரயமானது இடப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கையுடன் நேரடியாக மாறுபடுகின்றது.

B - மொத்த இருப்பு வைத்தல் கிரயமானது சராசரி சரக்கிருப்பு மட்டத்துடன் நேரடியாக மாறுபடுகின்றது.

C - கட்டளை அளவு அதிகரிக்கும் போது மொத்த இருப்பு வைத்தல் கிரயம் குறைவடைவதுடன் மொத்தக் கட்டளைக் கிரயம் அதிகரிக்கின்றது.

1) A மாத்திரம்  2) B மாத்திரம்  3) A, B மாத்திரம்
4) B,C மாத்திரம்  5) A, C ஆகிய எல்லாம்.  (……….)

30) வரையறுத்த வலம்புரி உற்பத்தி கம்பனியின் தகவல்கள் தரப்படுகின்றன.

பொது மேந்தலைக் கிரய உறிஞ்சல் வீதம்.

- இயந்திர திணைக்களம் இயந்திர மணித்தியாலம் ஒன்றிற்கு - ரூ 30.
- ஒன்று சேர்த்தல் திணைக்களம் - ஊழிய மணித்தியாலம் ஒன்றிற்கு - ரூ 10

காலப்பிரிவிற்காக மதிப்பிடப்பட்ட தகவல்கள்.

| **திணைக்களம்** | **மதிப்பிடப்பட்ட மணித்தியால எண்ணிக்கை** |
|---|---|
| இயந்திரம் | இயந்திர மணித்தியாலம் 800 |
| ஒன்று சேர்தல் | ஊழிய மணித்தியாலம் 700 |

காலப்பிரிவின் மதிப்பிடப்பட்ட பொது மேந்தலைக் கிரயம்?

1) ரூ 7000  2) ரூ 8000  3) ரூ 21 000
4) ரூ 24 000  5) ரூ 31 000  (………)

(30 x 4 = 120 புள்ளிகள்)

❖ **31 - 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

31) பின்வரும் கூற்றுக்கள் நிதிக் கணக்கீட்டுடன் தொடர்புடையவையாயின் "சரி" எனவும், தொடர்பற்றவையாயின் "பிழை" எனவும் குறிப்பிடவும்.

| | | சரி / பிழை |
|---|---|---|
| (A) | இது வணிகம் தொடர்பான கடந்தகால, எதிர்காலத் தகவல்களை வழங்குகின்றது. | ……………………… |
| (B) | இது கணக்கீட்டு நியமங்கள் சட்டங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றது. | ……………………… |
| (C) | இது நிறுவன முகாமையாளர்கள் தீர்மானம் எடுப்பதற்கான தகல்களை வழங்குகின்றது. | ……………………… |
| (D) | இது வெளியக மற்றும் உள்ளகத் தரப்பினர்களது தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடியது. | ……………………… |

32) வணிகமொன்றில் 2018 ஜீன் 01 இல் சில்லறைக்காசு மீதி ரூ 640 ஆகக் காணப்பட்டது. 2018 மே மாதம் சில்லறைச் செலவுகளின் மொத்தம் வருமாறு,

தபால் செலவு ரூ 390  போக்குவரத்துச் செலவு ரூ 385
உபசரிப்புச் செலவு ரூ 450  நானாவித செலவு ரூ 370
எழுது கருவிச் செலவு ரூ 415
கடன் கொடுத்தோர் (கலைநிலா) ரூ ?

2008 ஜீன் மாதம் 01 ஆந் திகதி கட்டு நிதி ரூ 500 ஆல் அதிகரிப்பு செய்யப்பட்ட தற்கேற்ப கட்டு நிதி மீள் நிரம்பல் தொகை ரூ 3460 ஆகும். பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) 2018 மே மாதம் ஆரம்பத்தில் சில்லறைக்காசுக் கட்டுநிதி யாது? ………………………

ஆ) 2018 மே மாதம் கடன்கொடுநர் கலைநிலை என்பவருக்கு செலுத்தப்பட்ட காசு தொடர்பான பொதுப் பேரேட்டுப் பதிவிற்கான நாட்குறிப்பு பதிவினை தருக? ………………………
………………………

agaram.lk

33) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் எனக் குறிப்பிடுக.

1) உரிமையாளரின் சொந்தச் செலவுகள் வணிகத்தின் செலவு கருதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படலாம். (…………)

2) வணிகமானது தனது செயற்பாட்டுக் கருமங்களினூடாக மட்டுமே வருமானத்தை உழைக்கிறது. (…………)

3) விற்பனையில் இருந்து விற்பனைக் கிரயத்தினை கழித்தல் இணைத்தல் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும். (…………)

4) மேலதிக மூலதனமின்றி உரிமையாண்மையில் ஏற்படும் அதிகரிப்பானது வருமானம் ஆகும். (…………)

34) பின்வரும் நிகழ்வுகளுக்குப் பொருத்தமான எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

அ) பற்றுக்களை அறிக்கைப்படுத்தல் ……………………………………

ஆ) வருமதி வருமானங்களை இனங்காணல். ……………………………………

இ) நிதி நிலமைக்கூற்றில் வியாபார வருமதியாளரை சொத்தாகவும், வியாபார கொடுக்கு மதியாளரை பொறுப்பாகவும் காட்டப்படுதல். ……………………………………

ஈ) இறுதிச் சரக்கிருப்பினை கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமானம் என்பவற்றில் குறைவான பெறுமானத்தில் அறிக்கைப் படுத்தல். ……………………………………

❖ **35, 36ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

வரையறுத்த துர்க்கா பொதுக்கம்பனியின் 2018 யூன் 30 இல் தயாரித்த கடன் கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கிணங்க கூற்று பின்வருமாறு. (000ல்)

| | | |
|---|---|---|
| 30.06.2018 இல் கடன்கொடுநர் பேரேட்டு பட்டியல் மீதி | | 320 |
| **கூட்டுக**. A. சில்லறைக்காசு கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்ட குமரனுக்கான கொடுப்பனவு கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படாமை | 10 | |
| B. மாறன் கணக்கில் குறைத்துப் பதிந்த கடன் கொள்வனவு | 20 | 30 |
| | | 350 |
| **கழிக்குக.** | | |
| C. விதித்த வட்டி | 12 | (12) |
| 30.03.2018 இல் கடன் கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி. | | 338 |

குறிப்பு D கடன்படுநர் பேரேட்டில் இருந்து கடன் கொடுத்தோர் பேரேட்டுக்கான எதிரேடு ரூ 20 000 எவ்வித ஏடுகளிலும் பதியப்படவில்லை.

35) 30.06.2018 இல் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது? ……………………………………………

36) அ) பொதுப்பேரேட்டில் ஏற்பட்ட வழுக்களைத் திருத்தும் நடவடிக்கைகளை குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைக் குறிப்பிடுக? …………………………………………

ஆ) D குறிக்கும் நடவடிக்கைக்குரிய பொது நாட்குறிப்பேட்டுப் பதிவைத் தருக?

………………………………………

………………………………………

agaram.lk

37) கீழே தரப்பட்டுள்ள முதன்மை ஏடுகளுக்கு தேவையான மூல ஆவணங்களை குறிப்பிடுக.

| **முதன்மை ஏடுகள்** | **மூல ஆவணம்** |
|---|---|
| (A) விற்பனை நாட்குறிப்பேடு | ………………………………………….. |
| (B) விற்பனைத் திரும்பல் நாட்குறிப்பேடு | ………………………………………….. |
| (C) காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு | ………………………………………….. |
| (D) பொது நாட்குறிப்பேடு | ………………………………………….. |

38) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 (இருப்புக்கள்) இற்கு அமைய இருப்பினை செலவொன்றாக இனங்காண்பதற்கான இரண்டு சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.

1) ………………………………………………………………………………………………...

2) ………………………………………………………………………………………………...

39) 2017.04.01 இல் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட "தாயகம்" பொதுக்கம்பனியின் 2018.03.31 இல் பின்வரும் கணக்கு மீதிகள் காணப்பட்டன.

| **கணக்கு** | **ரூ (000ல்)** |
|---|---|
| நிறுத்தி வைத்த இலாபம் | 800 |
| சென்மதி வட்டி | 60 |
| சென்மதி வருமானவரி | 80 |

**மேலதிக தகவல்கள்**

- ஆண்டுக்கான ஆதனம் பொறி உபகரணத் தேய்வு ரூ 500, 000.
- வருட காலத்தில் குத்தகை வட்டிச் செலவு மற்றும் ஏனைய வட்டிச் செலவுகள் முறையே ரூ 100, 000 ரூ 200 000 ஆகும்.
- காசு மற்றும் காசுக்கு சமமனவை நீங்கலான தொழிற்படு மூலதனத்தின் அதிகரிப்பு ரூபா 450 000 ஆகும்.

2018.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான செயற்பாட்டு நடவடிக்கையினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் யாது?

…………………………………………………………………..

agaram.lk

40) பின்வரும் ஆவணங்கள் ஆரம்பிக்கும் இடத்தையும் அது முடிவடையும் இடத்தையும் குறிப்பிடுக.

| ஆவணங்கள் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் |
|---|---|---|
| 1) களஞ்சிய வேண்டுகோள் பத்திரம் | | |
| 2) பொருள் வேண்டுகோள் பத்திரம் | | |
| 3) கொள்வனவுக் கட்டளை | | |
| 4) விநியோகக் குறிப்பு | | |

41) கம்பனியொன்றில் இடம் பெறும் கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்களில் கம்பனியின் உரிமையாண்மை, மற்றும் சொத்துக்கள் என்பவற்றில் ஏற்படும் விளைவுகளை "அதிகரிக்கும்" "குறையும்" "மாற்றமில்லை" என எழுதிக் காட்டுக.

| | **உரிமையாண்மை** | **சொத்துக்கள்** |
|---|---|---|
| (A) உரிமைப்பங்கு வழங்கல். | ………………………….. | ………………………….. |
| (B) நித்தி வைத்த வருவாயில் இருந்து பொது ஒதுக்கத்துக்கு மாற்றம். | ………………………….. | ………………………….. |
| (C) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தினை சாதாரண பங்கு மூலதனமாக்கல் | ………………………….. | ………………………….. |
| (D) முதல் தடவை காணி குறைத்து மீள் மதிப்பிடல். | ………………………….. | ………………………….. |

42) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் காமதேனு வணிகத்தில் இடம் பெற்றுள்ளன.

10.01.2019 பொருட்களின் விநியோகத்திற்காக கட்டளை ஒன்றினை வாடிக்கையாளர் ஒருவரிடம் பெற்றதுடன் முற்பணமாக ரூ 200 000 காசு பெறப்பட்டது.

25.01.2019 மேற்படி கட்டளைக்கான பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் காசாக ரூ 200 000 பெறப்பட்டது.

04.02.2019 இக்கட்டளைக்கான மீதிப்பணம் ரூ 100 000 பெறப்பட்டது.

மேற்படி கட்டளையின் வருமானத்தினை இனம் காணுதல் தொடர்பான,

அ) வருமானத்தை இனம் காணும் திகதி. ..............................

ஆ) இத்திகதியில் இனங் காணப்பட வேண்டிய வருமானம் ரூ ..............................

இ) மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கரு ..............................

43) பங்குப் பிரதிபயன் ஒன்றினை செலுத்தக்கூடிய விடயங்கள் எவை?

1) ..................................................................................

2) ..................................................................................

3) ..................................................................................

4) ..................................................................................

44) 200 மில்லியன் சாதாரண பங்குகளை மூலதனமாக கொண்டு 2016.04.01 திகதி ஆரம்பிக்கப்பட்ட சகானியா கம்பனியின் 2016/2017 மற்றும் 2017/2018 வருடங்களுக்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(ரூபா மில்லியனில்)

| | 2016 / 2017 | 2017 / 2018 |
|---|---|---|
| 31/ 03 இல் மொத்த சொத்துக்கள் | 280 | 500 |
| மொத்த வருமானம் | 600 | 880 |
| வருமானவரி தவிர்ந்த மொத்த செலவுகள் | 640 | 700 |
| வருமான வரி | | 36 |
| செலுத்திய பங்குலாபம் | | 20 |

1) 2017 / 03 / 31 திகதியில் மொத்தப் பொறுப்பு ........................................

2) 2018 / 03 / 31 திகதியில் மூலதனம் ........................................

45) கம்பனியொன்று சரக்கிருப்பு வழங்கலை விலையிடுவதற்கு நிறையளித்த சராசரி முறையை பயன்படுத்துகிறது. 2018 மார்ச் மாதத்துக்கான சரக்கிருப்பின் உருப்படியொன்று தொடர்பான தகவல்கள் பின்வருமாறு,

| **திகதி** | **விபரம்** | **அளவு (அலகுகள்)** | **விலை (ரூ)** |
|---|---|---|---|
| 01.03.2018 | மீதி | 1000 | 10 |
| 10.03.2018 | கொள்வனவு | 2000 | 15 |
| 18.03.2018 | கொள்வனவு | 4000 | 11 |
| 25.03.2018 | விற்பனவு | 4000 | ? |

பின்வருவனவற்றை கணிக்குக.

அ) 2018 மார்ச் மாதத்துக்கான விற்பனைக் கிரயம் ரூ ........................................

ஆ) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான சரக்கிருப்பு. ........................................

agaram.lk

46) கம்பனியொன்றின் ஒரே காலப்பகுதிக்கான பாதீட்டு உற்பத்தி மேந்தலைகள் இரண்டு செயற்பாட்டு மட்டங்களில் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| செயற்பாட்டு மட்டம் (அலகுகள்) | பாதீட்டு உற்பத்தி மேந்தலைகள் (ரூபா) |
|---|---|
| 30 000 | 225 000 |
| 40 000 | 275 000 |

அலகு ஒன்றின் மூலக்கிரயம் ரூ 10 என மதிப்பிடப்பட்டுள்ளது. 40000 அலகுகள் கொண்ட செயற்பாட்டு மட்டத்தில் மொத்த மாறும் உற்பத்தி மேந்தலைகள் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயம் என்பன.

அ) மொத்த மாறும் உற்பத்தி மேந்தலைகள் ……………………………………..

ஆ) மொத்த உற்பத்திக் கிரயம் ……………………………………

47) பின்வரும் தகவல்கள் வருடமொன்றில் உற்பத்திக் கம்பனியொன்றினால் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் $x$ தொடர்பானது.

| | **ஆகக் குறைந்தது** | **ஆகக் கூடியது.** |
|---|---|---|
| நுகர்வு (அலகுகள்) | 2000 | 5000 |
| விநியோககாலம் (மாதங்கள்) | 4 | 6 |

ஆகக் கூடிய சரக்கிருப்பு மட்டம் 42 000 அலகுகள் ஆகும். இம்மூலம் பொருளின் மறுகட்டளை மட்டம், மறுகட்டளைத் தொகை என்பன.

அ) மறுகட்டளை மட்டம் (அலகுகள்) …………………………………………...

ஆ) மறுகட்டளைத் தொகை (அலகுகள்) …………………………………………..

48) சப்பாத்து உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு கிரயங்களையும் “நேர்க்கிரயம்” அல்லது “நேரில் கிரயம்” என வகைப்படுத்துக.

அ) இயந்திர இயக்குனர்களின் கூலிகள். ……………………………………..

ஆ) இயந்திரப் பெறுமான தேய்வு ……………………………………

இ) பதனிடப்பட்ட தோலின் கிரயம் ……………………………………

ஈ) தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் ……………………………………

49) வணிகம் ஒன்றின் மூலப்பொருள் பாவனை தொடர்பான தகவல்கள் வருமாறு,

| | ஆகக் குறைந்தது | ஆகக்கூடியது |
|---|---|---|
| முதன்மைக் காலம் (வாரம்) | 3 | 6 |
| நுகர்வு (அலகுகள்) | 200 | 600 |

இம்மூலப் பொருளின் இழிவுச் சரக்கிருப்பு மட்டம் யாது? ……………………………….

agaram.lk

50) 'தீன்சுவை உற்பத்திக் கம்பனியால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள் தொடர்பான தகவல்கள்'

மதிப்பிடப்பட்ட மேந்தலைக் கிரயங்கள் - உற்பத்தி கிரய நிலையம் - ரூ 350 000

சேவை நிலையம் - ரூ 50 000

மதிப்பிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் - 50 000 (அலகொன்றிற்கான இயந்திர மணித்தியாலயம் - 5)

உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை – 75 000 அலகுகள்

முதன்மைக் கிரயம் - ரூ 600, 000

வேண்டப்படுவது,

அ) இயந்திர மணித்தியாலத்துக்கான மேந்தலை உறிஞ்சல் வீதம் ரூ …………………………..

ஆ) அலகு ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம் ரூ …………………………..

(20 x 4 = 80 புள்ளிகள்)

agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | கணக்கீடு II | 3.10 மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்**

- **முதலாம், இரண்டாம் வினாக்கள் கட்டாய வினாக்களாகும்.**
- **முதலாம், இரண்டாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) வரையறுத்த நாமகள் பொதுக்கம்பனியானது பெறுமதி சேர் வரிக்காக பதிவினைக் கொண்ட கம்பனியாகும். (தற்போது 15% VAT நடைமுறையில் உள்ளது எனக்கொள்க)

***31.03.2018 ல் கம்பனியின் பரீட்சைமீதி*** **(ரூ000ல்)**

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 2017.04.01 இல் வியாபார சரக்கிருப்பு | 2000 | |
| வியாபார வருமதியாளர் | 5000 | |
| காசுக்கட்டுப்பாட்டு மீதி | 2850 | |
| திறைசேரி உண்டியல் (3மாத முதிர்வினை கொண்டது) | 2000 | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 16000 | |
| ஊழியர் நம்பிக்கை நிதிச் செலவீனம் | 45 | |
| ஊழியர் சேமலாப நிதிச் செலவீனம் | 225 | |
| நிதியாண்டில் செலுத்திய வருமானவரி | 380 | |
| கட்டிட பராமரிப்பு செலவு | 100 | |
| செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் | 1000 | |
| வாடகை | 100 | |
| காப்புறுதி | 400 | |
| சம்பளங்கள் - ஊழியர் | 2000 | |
| செலுத்திய பெறுமதி சேர்வரி | 1100 | |
| கொள்வனவுகள் (VAT உள்ளடங்கலாக) | 8050 | |
| செலுத்திய குத்தகை தவணைக் கட்டணம் | 1150 | |
| பெற்ற தரகு வருமானம் | | 100 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 10000 |
| 01.04.2017 இல் இலாபநட்ட கணக்கு மீதி | | 3000 |
| 01.04.2017 இல் பொது ஒதுக்கீடு | | 1600 |
| 01.04.2017 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - உபகரணம் | | 200 |
| குத்தகை கடன் கொடுநர் | | 4150 |
| 01.04.2017ல் வியாபார வருமதியாளர்களின் எதிர்ப்பார்க்கை நட்டங்களுக்கான படிகள் | | 400 |
| விற்பனைகள் (பெறுமதி சேர்வரி உட்பட) | | 18400 |
| சென்மதி ஊழியர் சேமலாப நிதியம் | | 50 |
| வியாபார சென்மதியாளர் | | 3000 |
| 2017.04.01 இல் திரண்ட தேய்மானம் | | 1500 |
| | 42400 | 42400 |

agaram.lk

மேலதிக தகல்கள்.

பின்வரும் சீராக்கல்கள் 2018.03.31 இல் முடிவடையும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

1) 2018.03.31 ல் முடிவுற்ற வருடத்துக்கான அட்டுறு வாடகை ரூபா 12000 ஆக காணப்பட்டதுடன், காப்புறுதியானது 01.04.2019ல் தொடக்கம் நிதி வருடத்துக்குரிய ரூ 7000 ஐயும் உள்ளடக்கியுள்ளது.
2) ஆண்டுக்காலத்தில் ரூபா 300 000 வியாபார வருமதிக்களில் மதிப்புக் குறைப்பு நட்டமாக பதிவளிப்பதுடன், எஞ்சிய வருமதியாளரில் வியாபார வருமதிகளுக்கான எதிர்ப்பார்க்கை நட்டங்களுக்கான படிகளை 10% மாக சீராக்க வேண்டும்.
3) VAT நீங்கலான தேறிய விற்பனையில் 1% இனை விற்பனையாளர் (முகவர்) தருகுக்கு ஏற்பாடு செய்க.
4) கம்பனியின் சரக்கிருப்பானது 31.03.2018 இல் மூன்று வகையான உருப்படிகளை கொண்டுள்ளது. சரக்கிருப்பானது உருப்படி அடிப்படையில் பெறுமதியிடுகின்றது. இத்தினத்தில் அவற்றின் கிரயம் மற்றும் நிகரத் தேறத்தக்க பெறுமதி ஆகியன பின்வருமாறு இருந்தது.

(ரூபா)

| வகை | அலகுகள் | அலகு ஒன்றின் கிரயம் | ஆலகொன்றின் நிகரதேறத்தக்க பெறுமதி |
|---|---|---|---|
| A | 1000 | 1000 | 1200 |
| B | 2000 | 500 | 400 |
| C | 2500 | 400 | 200 |

5) நடைமுறை ஆண்டுக்கான வருமான வரியானது வரிக்கு முன்னரான இலாபத்தில் 20% ஆக மதிப்பிடப்படும்.
6) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களினதும் அவற்றின் திரண்ட பெறுமானத் தேய்வின் உள்ளடக்கமும் பின்வருமாறு.

(ரூ000ல்)

| உருப்படி | கிரயம் 01.04.2017 | திரண்டதேய்வு 01.04.2017 | எஞ்சிய பெறுமதி | ஆயுட்காலம் வருடங்கள் |
|---|---|---|---|---|
| காணி | 4800 | - | | |
| கட்டிடம் | 4200 | 1000 | 200 | 40 |
| மோட்டார்வான் (01.04.2017ல் மீதி நிதிக்குத்தகையில் வாங்கப்பட்டது) | 5000 | - | | 5 |
| உபகரணங்கள் | 1500 | 300 | | 4 |
| தளபாடம் | 500 | 200 | | 5 |
| | 16000 | | | |

7) 01.04.2017 இல் 5வருட நிதிக்குத்தகையில் கீழ் மோட்டார் வான் கொள்வனவு செய்யப்பட்டது. இச் சொத்தின் குத்தகை உடன் படிக்கையின் ஆரம்பக் கொடுப்பனவு ரூபா 850 000 செலுத்தப்படல் வேண்டும். மேலும் வருடாந்த குத்தகை தவணைக் கட்டணம் ரூ 1150 000 ஐ 31.03.2018 இனது ஒவ்வொரு வருட இறுதியில் செலுத்தப்படல் வேண்டும்.

ரூபா (000ல்)

| வருடம் | வட்டி |
|---|---|
| 2017 / 18 | 380 |
| 2018 / 19 | 350 |
| 2019 / 20 | 320 |
| 2020 / 21 | 290 |
| 2021 / 22 | 260 |

ஆரம்பக் குத்தகைப் பொறுப்பும், ஆரம்ப கொடுப்பனவும் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் நடைமுறையாண்டுக்கான தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இவ் வருடத்துக்கான குத்தகை தவணைக் கட்டணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

8) உபகரமானது 31.03.2018 இல் ரூபா 600, 000 ஆகச் சந்தைப் பெறுமானத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கம்பனியின் காணியானது 31.03.2018 இல் ரூபா 5300 000 என தகுதி பெற்ற மீள் மதிப்பீட்டாளரால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. அத்துடன் 01.04.2017 இல் இருந்து கட்டிடத்தின் ஆயுட்காலமானது 20 ஆண்டுகள் எனவும் எஞ்சிய பெறுமதி மாறாது என மதிப்பிடப்பட்டது.

9) ஊழியர் சேமலாப நிதிக்கு வேலை கொள்வோர் 15% உம், ஊழியர்கள் 10% உம் பங்களிப்பு செய்கின்றனர். ஊழியர் நம்பிக்கை நிதியத்தக்கு வேலை கொள்வோர் 3% பங்களிப்புச் செய்கின்றனர். இக்கம்பனியானது நடைமுறை நிதி வருடத்துக்கான இறுதி 3 மாதங்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றிற்கு எதுவித ஏற்பாடுகளும் செய்யவில்லை. எனினும் இறுதி 3 மாதங்களுக்கான ஊழியர்களது ஊழியர்களது ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு ஊழியர் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டு சென்மதி ஊழியர் சேமலாப கணக்கில் செலவில் பதியப்பட்டுள்ளது.

10) வருடத்தில் ஏற்பட்ட உரிமை மாற்றம் தொடர்பான விடயங்கள்.

அ) 01.04.2017 இல் சாதாரண பங்கு மூலதனமானது ரூபா 7000000 ஆக இருந்ததுடன், 01.10.2017 இல் 300 000 சாதாரண பங்குகள் ரூ 10 வீதம் உரித்து வழங்கல் செய்து பணப் பெறப்பட்டு முறையாக பதிவுகள் செய்யப்பட்டது.

ஆ) 31.03.2018 இலாபநட்ட கணக்கு நிதியில் இருந்து ரூ 1200000 பொது ஒதுக்கீட்டுக்கு மாற்றுதல் வேண்டும்.

இ) நிதிவைத்தல் வருவாயில் இருந்து ஒதுக்கீடுகளை மூலதனமாக்கல் என்ற அடிப்படையில் 15000 சாதாரண பங்குகள் ரூபா 20 வீதம் வழங்கியது. இது தொடர்பான பதிவுகள் இன்னமும் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது,

LKAS – 01 (நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்) இன்படி வரையறுத்த நாமகள் பொதுக்கம்பனியின் பொது நோக்கத்துக்கான தேவையான பின்வரும் நிதிக்கூற்றுக்கள்.

1) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றும் மடக்கிய இலாப நட்டக்கூற்று.
2) 31.03.2018 இல் முடிவுற்ற வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று.
3) 31.03.2018ல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று.

(மொத்தம் 20 புள்ளிகள்)

2) அ) சுதனும், சதனும் இலாப நட்டங்களைச் சமனாக பகிரும் பங்காளர் ஆவார். இப்பங்குடமையில் மதன் புதிய பங்காளராக 31.03.2018 இல் அனுமதிக்கப்பட்டார். பின்வரும் பழைய உடன்படிக்கையை புதிய உடன்படிக்கையாக உருவாக்கப்பட்டது.

பங்காளர் மூலதனத்துக்கான வட்டி 10%

பங்காளர் மாதாந்த சம்பளம் ரூ 1000 வீதம்

புதிய இலாப நட்ட விகிதம் 2 : 2 : 1

மதன் அனுமதிக்கப்படும் போது பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 50000 என மதிப்பிடப்பட்டது. நன்மதிப்பு தொடர்பான சீராக்கம் மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்கப்படல் வேண்டும்.

agaram.lk

31.03.2018 இல் உள்ளவாறு பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 31.03.2018 ல் தேறிய இலாபம் | | 300, 000 |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 600, 000 | |
| திரண்ட பெறுமதியான தேய்வு | | 100, 000 |
| 10% நிலையான வைப்பு | 400, 000 | |
| வியாபார வருமதியாளர், சென்மதியாளர் | 175, 000 | 40, 000 |
| வியாபார இறுதிச் சரக்கிருப்பு | 200, 000 | |
| காசும் காசுக்குச் சமமானவை | 300, 000 | |
| மூலதனக் கணக்கு – 01.04.2017 சுதன் | | 400, 000 |
| சதன் | | 400, 000 |
| மதன் கொண்டு வந்த காசு | | 210, 000 |
| பங்காளர் நடைமுறைக் கணக்கு – சுதன் | | 75, 000 |
| - சதன் | | 50, 000 |
| 10% வங்கிக்கடன் | | 100, 000 |
| | 1675 000 | 1675 000 |

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பின்வரும் தகவல்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

1) சுதனின் சொந்த ஆயுட்காப்புறுதிக் கட்டணம் ரூ 20, 000 காப்புறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டு இருந்தது.
2) சதனின் சொந்தக் கட்டிடத்தில் பங்குடமை இயங்குவதால் வருடாந்த வாடகை ரூபா 20, 000 செலுத்தப்படல் வேண்டும்.
3) சுதன் வணிகத்தின் வாடிக்கையாளர் ஒருவரை சந்திக்க சென்ற வகையால் அவருக்கான பிரயாண செலவு ரூ 15000 ஏடுகளில் பதியப்படவில்லை.
4) ஏனைய சீராக்கங்கள் யாவும் தேறிய இலாபக் கணிப்பீட்டில் கவனத்தில் கொள்ளப்பட்டன.

வேண்டப்படுவது.

அ) 31.03.2018 இல் தேறிய இலாபத்தினை சீராக்கும் கூற்று.
ஆ) 31.03.2018 இல் பங்காளர் இலாப பகிர்வுக் கூற்று.
இ) 31.03.2018 இல் பங்காளர், மூலதன, நடைமுறைக்கணக்கு.
ஈ) 31.03.2018 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று. (10 புள்ளிகள்)

ஆ) சந்தானம் வணிகம் பின்வரும் பொருள் X தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தியது. வணிகமானது FIFO முறையை பயன்படுத்துகின்றது.

1.

| திகதி | விபரம் | தொகை (அலகுகள்) | அலகுக்கான விலை (ரூபா) |
|---|---|---|---|
| 01.03.2018 | மீதி | 5000 | 10 |
| 05.03.2018 | கொள்வனவு | 4000 | 12 |
| 15.03.2018 | கொள்வனவு | 5000 | 14 |
| 22.03.2018 | கொள்வனவு | 4000 | 15 |

2. வழங்கல் தொடர்பான விபரம்

| திகதி | விபரம் | தொகை (அலகுகள்) | அலகுக்கான விற்பனை விலை (ரூபா) |
|---|---|---|---|
| 06.03.2018 | வழங்கல் | 7000 | 30 |
| 18.03.2018 | வழங்கல் | 3000 | 30 |



agaram.lk

3. ஏனைய தகவல்கள்

| | கூடியது | குறைந்தது |
|---|---|---|
| பாவனை (ஒரு மாதத்துக்கான அலகுகள்) | 4000 | 1000 |
| முதன்மைக்காலம் (மாதங்கள்) | 5 | 3 |
| உச்ச இருப்பு மட்டம் | 47000 அலகுகள் | |

வேண்டப்படுவது
1. மறு கட்டளைத் தொகை
2. மார்ச் மாதம் வழங்கிய இருப்புக்களின் கிரயம்.
3. மறுகட்டளை மட்டம்
4. மார்ச் மாத இறுதி இருப்பு
5. மார்ச் மாதத்திற்கான மொத்த இலாபம் (05 புள்ளிகள்)

இ) 2018 மார்ச் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான மேசைகள் உற்பத்தி நிறுவனமொன்று தொடர்பாக பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.
- உற்பத்தி செய்யப்பட்ட மேசைகள் 1000 அலகுகள்
- விற்பனை செய்யப்பட்ட மேசைகள் 900 அலகுகள்
- பாவிக்கப்பட்ட மொத்தப் பலகைகளின் அளவு 6000 சதுர மீற்றர்கள்.
- மேசை ஒன்று உற்பத்தி செய்வதற்கான தச்சு வேலை செய்பவர் கூலி ரூ 3610
- வருடத்துக்கான மேந்தலைக் கிரயங்கள்
  - உற்பத்தி 400, 000
  - உற்பத்தியில்லாதவை 300, 000
- பொருள் வழங்கல் முறையானது முதல்வந்தது முதல் வெளியே முறை அடிப்படையில் அமையும்.
- வருட காலத்தில் சதுரமீற்றர் ஒன்று ரூ 500 படி 6150 சதுர மீற்றர் பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- 01.04.2017ம் திகதியில் இருப்புக்கள்.
  சதுர மீற்றர் ஒன்று ரூ 400 படி 100 சதுர மீற்றர் பலகை.
  மேசை ஒன்று ரூ 5200 படி – 100 மேசைகள்
- 31.03.2018 முடிவடைந்த வருடத்தில் கொள்வனவு செய்த பலகைகளில் 50சதுர மீற்றர் பலகைகள் பழுதடைந்துள்ளன.
- மேசை ஒன்றின் விற்பனை விலை ரூபா 10000 ஆகும்.

வேண்டப்படுவது
1. வருடத்துக்கான உற்பத்திக்கிரயக் கூற்று.
2. வருடத்துக்கான இலாபநட்டகூற்று. (05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk

3) அ) பூமிகா வணிகத்தின் 01.01.2019 இல் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு,

**சொத்துக்கள்**

| | |
|---|---|
| காசு மீதி | ரூ 250 000 |
| சரக்கிருப்பு | ரூ 50 000 |
| வியாபார வருமதியாளர் | ரூ 100 000 |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| கடன் கொடுத்தோர் | ரூ 100 000 |

**உரிமை**

| | |
|---|---|
| மூலதனம் | ரூ 250 000 |
| நிறுத்தி வைத்தவருவாய் | ?? |

ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

01.01. ரூ 200 000 பெறுமதியான ஆதனம் பொறி கொள்வனவு செய்யப்பட்டது. பெறுமானத் தேய்வு கிரயத்தில் 12%.

04.01 மீள்விற்பனை நோக்கம் கருதி கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் ரூ50 000

06.01 பின்வரும் செலவீனங்கள் காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

- வாடகை ரூ 5000
- காப்புறுதி ரூ 7000

07.01 கடன் விற்பனை ரூ 40, 000 இதன் கிரயம் ரூ 30, 000. ஒரு மாதத் தவணைக்குள் கடன் பணம் செலுத்தப்படுமாயின் 10% காசுக்கழிவு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

09.01 ஏனைய வருமானமாக ரூ 25000 பெறப்பட்டது.

12.01 கடன்பட்டோரிடம் பெறக்கூடிய 50% ஆன தொகை கழிவு அனுமதித்து காசு பெறப்பட்டது. (07.01.2019 கடன் விற்பனையில் இருந்து)

17.01 மீள் விற்பனை நோக்கம் கருதி கடன் கொள்வனவு ரூ 20 000.

19.01 கடன் கொடுத்தோரிற்குச் செலுத்தியது. ரூ 35 000

25.01 ரூ 50000 வங்கிக்கடன் பெறப்பட்டது.

வேண்டப்படுவது,

சொத்து = (மூலதனம் + நிறுத்தி வைத்த வருவாய்) + பொறுப்பு எனும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஆரம்ப மீதிகளைப் பதிவுசெய்து கொடுக்கல் வாங்கல்களை அதன் கீழ் பதிக. (05 புள்ளிகள்)

ஆ) சாகித்தியா வணிகமானது 2019 ஜனவரி 01 இல் பெறுமதி சேர்வரி (VAT) அறவீடு செய்வதற்குப் பதிவு செய்த நிறுவனமாகும். இவ் வணிகத்தின் ஜனவரி மாதம் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் வருமாறு,

1) ரூ 500, 000 காசும் ரூ 500 000 பெறுமதியான வாகனமும் வணிகத்தில் மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டது.
2) தம்ரோ தளபாடக் கம்பனியிடமிருந்து 15 % VAT உள்ளடங்கலாக ரூ 82800 ற்கு கடனுக்கு தளபாடம் வாங்கப்பட்டது.
3) கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட மீள் விற்பனைக்கான சரக்குகள் (பட்டியல் விலையில்)
   - துர்க்கா ரூ 120 000
   - மதுரா ரூ 80 000

   கொள்வனவின் போது 10% வியாபாரக்கழிவு வழங்குனரால் வழங்கப்பட்டதுடன் 15% VAT வரி சேர்ப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.
4) கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்கள் (பட்டியல் விலையில்)
   - பாரதி ரூ 160 000
   - விதுஷா ரூ 120 000

   விற்பனையின் போது 10% வியாபாரக்கழிவு கழிப்பதெனவும் 15% பெறுமதி சேர்வரி அறவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.
5) பாரதி 15% VAT உள்ளடங்கலாக திருப்பி அனுப்பிய பொருட்களின் பெருமானம் ரூ 13 800. அதேவேளை மதுராவுக்கு 15% VAT உள்ளடங்கலாக திருப்பி அனுப்பிய பொருட்கள் ரூ 9200.
6) ஜனவரி மாதம் இடம்பெற்ற காசுப்பெறுவனவு, காசோலைக் கொடுப்பனவு பற்றிய விபரம் வருமாறு,

   காசுப் பெறுவனவு.
   - 15% VAT வரி உள்ளடங்கலாக காசு விற்பனை ரூ 69 000
   - வியாபார வருமதியாளரான பாரதியிடம் பெற்ற காசோலை ரூ 60 000 (கொடுத்த கழிவு ரூ 2000)
   - வியாபார வருமதியாளரான விதுஷாவிடம் பெற்ற காசோலை ரூ 40 000 (கொடுத்த கழிவு ரூ 3000)
   - வாடகை வருமானம் பெற்றது ரூ 11 000.

agaram.lk

காசோலைக் கொடுப்பனவுகள்

- தம்ரோ தளபாடக் கம்பனிக்கு ரூ 39 200.
- கடன்கொடுத்தோரான துர்க்காவிற்கு செலுத்திய காசோலை ரூ 60 000 (பெற்ற கழிவு ரூ 1800)
- வியாபார சென்மதியாளரான மதுராவிற்குச் செலுத்திய காசோலை ரூ 40 000 (பெற்ற கழிவு ரூ 6000)
- செயற்பாட்டுச் செலவுக் கொடுப்பனவு ரூ 30 000.
- கொள்வனவு 15% VAT உள்ளடங்கலாக ரூ 27 600.
- செலுத்தப்பட்ட VAT ரூ 10 000.

மேலதிக தகவல்கள்:

(i) 31.01.2019 இல் இருந்த சரக்கிருப்புக்களின் கிரயம் ரூ 24000.

(ii) மோட்டார் வாகனத்திற்கு கிரயத்தில் 6% உம் தளபாடத்திற்குக் கிரயத்தில் 12% உம் நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு இடப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது.

1. 2019 ஜனவரி மாதத்திற்கான VAT நிரல் உள்ளடங்கலான
   - அ) காசுப்பெறுவனவு நாட்குறிப்பேடு
   - ஆ) காசுக்கொடுப்பனவு நாட்குறிப்பேடு
   - இ) விற்பனை நாட்குறிப்பேடு
   - ஈ) கொள்வனவு நாட்குறிப்பேடு
   - உ) உட்திரும்பல் நாட்குறிப்பேடு
   - ஊ) வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு

2. பொதுப்பேரேட்டில் காணப்படுகின்றவாறு
   - அ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
   - ஆ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
   - இ) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

3. 2019 ஜனவரி மாதத்திற்கான இலாப நட்டக்கூற்று. (15 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk

4) அ) மாதங்கி சில்லறை வணிகத்தின் 2018 மார்ச் மாதத்துக்கான தகவல்கள் சில வருமாறு,

- மார்ச் 01 இல் கடன்கொடுநர் பேரேட்டு மீதி

| | |
|---|---|
| புகழ் | 20 000 |
| சுடர் | 30 000 |
| எழில் | 24 000 |
| திகழ் | 16 000 |
| | 90 000 |

- 2018 மார்ச் மாதத்துக்காக தயாரிக்கப்பட்ட முதன்மை ஏடுகளின் பொழிப்பு வருமாறு,

**கொள்வனவு நாட்குறிப்பேடு**

| வழங்குநர் | பெறுமானம் |
|---|---|
| புகழ் | 75 000 |
| சுடர் | 60 000 |
| எழில் | 37 500 |
| (பொதுப்பேரேட்டு மாற்றம்) | 172 500 |

**வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு**

| வழங்குநர் | பெறுமதி |
|---|---|
| புகழ் | 5000 |
| (பொதுப்பேரேட்டு மாற்றம்) | 5000 |

**காசுக்கொடுப்பனவு நாட்குறிப்பேடு.**

| விபரம் | பெறுமானம் | உடன்காசுக் கொள்வனவு | கடன்கொடுநர் கொடுப்பனவு | ஏனைய செலவின் கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| கொள்வனவு | 40 000 | 40 000 | | |
| புகழ் | 20 000 | | 20 000 | |
| சுடர் | 10 000 | | 10 000 | |
| கொள்வனவு | 30 000 | 30 000 | | |
| கட்டிட வாடகை | 25 000 | | | 25 000 |
| திகழ் | 10 000 | | 10 000 | |
| எழில் | 30 000 | | 30 000 | |
| புகழ் | 15 000 | | 15 000 | |
| கடன்வட்டி | 8 000 | | | 8 000 |
| நிலவன் | 20 000 | | 20 000 | |
| | 208 000 | 70 000 | 105 000 | 33 000 |

**குறிப்பு : நிலவனிடம் கடனுக்கு வாங்கிய கணணிக்கு செலுத்திய ரூ 20 000 கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவாக காட்டப்பட்டுள்ளது.**

வேண்டப்படுவது,
2018 மார்ச் மாதத்துக்கான
1. கடன் கொடுநர் பேரேடும், கடன் கொடுநர் அட்டவணையும்.
2. பொதுப் பேரேட்டில்
   அ) கடன் கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு (உரிய திருத்தங்களுடன்)
   ஆ) கொள்வனவுக் கணக்கு (10 புள்ளிகள்)

agaram.lk

ஆ) மலரவன் வணிகத்தின் கீழே தரப்பட்ட நிதி நிலைமைக் கூற்றானது வணிகத்தில் பயிலுநராக கடமையாற்றும் கணக்காளர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

**2018.12.31 இல் நிதிநிலைமைக் கூற்று**

| | | |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | | 600 000 |
| சரக்கிருப்பு | 240 000 | |
| வியாபார வருமதிகள் | 110 000 | |
| காசுக் கட்டுப்பாட்டு மீதி | 280 000 | |
| தொங்கல் கணக்கு | 100 000 | 730 000 |
| | | 1330 000 |
| மூலதனம் | 800 000 | |
| தேறியஇலாபம் | 300 000 | 1100 000 |
| கடன் கொடுநர் | | 230 000 |
| | | 1330 000 |

ஆய்வுகளின் போது பின்வருவன கண்டுபிடிக்கப்பட்டது.

1) வியாபார வருமதிகளின் மதிப்புக் குறைப்பு நட்டம் ரூ 3500 ஏடுகளில் ரூ 5300 எனப் பதிவிடப்பட்டுள்ளது.
2) காசு விற்பனை ரூ 20 000 காசுக்கட்டுப் பாட்டுக்கணக்கில் சரியாக பதிந்த போதிலும் விற்பனைக் கணக்கில் இரு தடவை செலவு வைக்கப்பட்டது.
3) சென்மதியாளருக்கான கொடுப்பனவு ரூ 65000 வும், மின்சாரக் கட்டணம் ரூ 15000 வும் காசு கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் சரியாக பதிவு செய்த போதும் உரிய கணக்குகளில் பதியப்படவில்லை.

வேண்டப்படுவது.

1. வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகளும், தேறிய இலாபத்தினை சீராக்கும் கூற்று.
2. வழுக்களைத் திருத்திய பின்னர் 2018.12.31 ல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று.

(5 புள்ளிகள்)

இ) இசையரசன் வாணிபமானது சில்லறைக் காசுக் கொடுப்பனவுகளை முற்பண முறையில் கட்டுப்பாடு செய்கின்றது. கட்டுநிதித் தொகை ரூ 2500 ஆகும். 2018 மே 01 இல் சில்லறைக் காசுக்கணக்கு மீதி ரூ 260 ஆகும். 2018 மே மாதத்துக்கான சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| மே. 01 | சில்லறைக்காசு முற்பணம் மீள் நிரம்பல் செய்யப்பட்டது. | | |
| மே. 05 | அஞ்சல் கட்டணம் | (சி.கை - இல 01) | 50 |
| மே. 06 | முத்திரை வாங்கியது. | (சி.கை - இல 02) | 180 |
| மே. 10 | எழுதுகருவி வாங்கியது. | (சி.கை. இல 03) | 350 |
| மே. 15 | பிரயாணச் செலவு | (சி.கை இல 04) | 230 |
| மே. 20 | துப்பரவாக்கல் செலவு | (சி.கை இல 05) | 180 |
| மே. 21 | பேரூந்துக் கட்டணம் | (சி.கை இல 06) | 300 |
| மே. 24 | வாடகைக் கார் செலவு | (சி.கை இல 07) | 250 |
| மே. 28 | சேரமானுக்கு கொடுத்தது. | (சி.கை இல 08) | 350 |
| மே. 30 | பிரதி எடுத்தல் கடதாசி. | (சி.கை இல 09) | 80 |
| மே. 31 | கட்டுநிதி மீளளிப்பு இடம்பெற்றது. | | |

தயாரிக்குக.

அ) 2018 மே மாதத்துக்கான சில்லறைக்காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு.
ஆ) பொதுப்பேரேட்டில் காணப்படுகின்றவாறு சில்லறைக்காசு உட்பட ஏனைய பேரேட்டுக் கணக்குகள். (05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5) அ) வெற்றியரசன் வணிகத்தினால் நடாத்திச் செல்லப்படும் தனிஉரிமை வணிகத்தின் சில்லறைச் செலவுகள் தவிர்ந்த ஏனைய சகல கொடுப்பனவுகளும் நடைமுறைக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் சகல பெறுவனவுகளும் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்பில் இடப்படுகிறது. கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஏனை தகவல்கள் பின்வருமாறு,

1. 2018 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **பெறுவனவுகள்** | **ரூ (000ல்)** |
|---|---|
| காசுக்கு விற்பனை | 560 |
| பாவனையில் இருந்த உபகரண விற்பனை | 200 |
| வருமதியாளரிடம் பெற்றது – அமீர் | 320 |
| பெற்ற வட்டி வருமானம் | 60 |
| வருமதியாளரிடம் பெற்றது – காதர் | 150 |

| **கொடுப்பனவு** | **ரூ (000ல்)** |
|---|---|
| உடன் காசுக் கொள்வனவு | 220 |
| சென்மதியாளருக்கு கொடுப்பனவு | 300 |
| செலவீனங்களுக்கான கொடுப்பனவு | 240 |
| எடுப்பனவு | 40 |
| உடன்காசு கொள்வனவு | 200 |

2. 2016.03.01 இல் வணிகத்தின் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூ 10,000 ஆக இருப்பதுடன், அது அத்திகதிய வங்கிக் கூற்றின் மீதியுடன் இணங்கியது.
3. கடன்பட்டோரான அமீருக்கு கொடுத்த கழிவு ரூ 4000 ஆக இருந்ததுடன் கடன் கொடுத்தோரான இமாமிடம் பெற்ற கழிவு ரூ 3000 ஆகக் காணப்பட்டது.
4. 2018 மார்ச் மாதத்தில் கிடைத்த வங்கிக் கூற்றின் பொழிப்பு.

| | (000ல்) |
|---|---|
| செலவு வைக்கப்பட்ட காசோலைகள் | 1000 |
| வரவு வைக்கப்பட்ட காசோலைகள் | 700 |
| வருமதியாளர் நேரவைப்பு | 100 |
| வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் | 20 |
| நிலையான கட்டளையின் கீழ்வங்கி செலுத்திய குத்தகை தவணைக் கட்டணம் | 15 |
| வைப்பில் இட்டு மதிப்பிழந்த காசோலைகள் | 90 |

வேண்டப்படுவது.

1) மேலே இலக்கம் (1) இன் தரவுகளின் உதவியுடன் 2018 மார்ச் மாதத்துக்கான காசுப் பெறுவனவு, காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடுகள்.
2) 2018.03.31 ஆம் காசுக் கணக்கினை சீராக்கி வங்கி இணக்க கூற்றினை தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) விதுசா, தணிகை, மாலதி ஆகியோரின் சம்பளம் தொடர்பான தகவல்கள் 2019 ஜனவரி மாதத்திற்காக தரப்பட்டுள்ளது.

1. வேலை செய்த மணித்தியாலங்கள். (ஜனவரி மாத மொத்த மணித்தியாலங்கள்)

| ஊழியர் பெயர் | வார நாட்கள் | வார இறுதி நாட்கள் |
|---|---|---|
| விதுசா | 40 | - |
| தணிகை | 40 | 10 |
| மாலதி | 40 | 20 |

2. மணித்தியால வீதங்கள்
   - → வார நாட்களுக்கான வீதம் - மணித்தியாலத்திக்கு - ரூ 200 வீதம்
   - → வார இறுதி நாட்களுக்கான மேலதிக நேரவீதம் - வாரநாட்களின் 1 ½ மடங்கு.
3. தொழில் தருநர், ஊழியர் என்போரால் ஊழியர் சேமலாபநிதி பங்களிப்புக்கள் முறையே 15%, 10% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு 3% ஆகும். (EPF, ETF கணிப்பீடு செய்வதற்கு மேலதிக நேர கொடுப்பனவு உரித்துடையன அல்ல).
4. கழிப்பனவுகள் / அறவீடுகள்
   - ⇨ நலன்புரிச் சங்கத்துக்கு ஊழியர்களின் மாதாந்த பங்களிப்பு ரூபா 200 ஆகும். (ஒருவருக்கு)
   - ⇨ மாலதியின் சம்பள முற்பண அறவீடு ரூ 4000 ஆகும்.

வேண்டப்படுவது.

1. 2019 ஜனவரி மாத சம்பளப் பட்டியல்
2. 2018 ஜனவரி மாத ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு. (05 புள்ளிகள்)

இ) வரையறுத்த பசீலன் கம்பனியின் 2017.03.31 இல் வாகனங்கள் கணக்கு மீதி ரூ 600000 உம் வாகன திரண்ட தேய்வு கணக்கு மீதி ரூ 125000 உம் ஆகும். வாகனங்கள் அனைத்தும் 2016.03.31 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அத்திகதியில் அவற்றின் பயன்படு ஆயுட்காலம் 4 வருடங்கள் எனவும் இழிவுப் பெறுமதி ரூ 100 000 எனவும் மதிப்பீடு செய்யப்பட்டது.

2018.03.31 இல் முடிவடையும் வருடத்தினுள் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

- ⇨ 01.04.2017 இல் ரூ 120, 000 கிரயம் கொண்டதும் ரூ 20, 000 இழிவு பெறுமதியை கொண்டதுமான வாகனம் 110, 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
- ⇨ 01.04.2017 இல் எஞ்சிய சகல வாகனங்களினதும் பயன்தரு ஆயுட்காலம் இத்தினத்திலிருந்து 5 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது.

வேண்டப்படுவது

முடிவு செய்தலுக்கான நாட்குறிப்பு பதிவு. (05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

6) இளங்கோ கம்பனி லிமிடெடின் ஏடுகளில் திரட்டப்பட்ட தகவல்கள் பின்வருமாறு,

31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று.

**(000ல்)**

| | | |
|---|---|---|
| விற்பனை | | 24 000 |
| (-) விற்பனைக் கிரயம் | | (15 000) |
| மொத்த இலாபம் | | 9000 |
| ஏனைய வருமானங்கள் | | 300 |
| | | 9300 |
| விநியோகச் செலவுகள் | 6000 | |
| நிர்வாகச் செலவுகள் | 1500 | |
| நிதிச் செலவுகள் | 300 | (7800) |
| வரி கழிக்க முன் இலாபம் | | 1500 |
| (-) வருமான வரி | | (600) |
| ஆண்டுக்கான இலாபம் | | 900 |

agaram.lk

2018.03.31, 2019.03.31 களில் தயாரிக்கப்பட்ட நிதி நிலமைக்கூற்றுக்களின் சுருக்கம் வருமாறு,

(ரூ000ல்)

| விபரம் | 2019.03.31 | 2018.03.31 |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் (முன் கொணர்ந்த மீதி) | 11 400 | 12 000 |
| இருப்புக்கள் | 1 800 | 900 |
| வியாபார வருமதிகள் | 1 200 | 1 500 |
| முற்பண செயற்பாட்டு செலவு | 50 | 200 |
| திறைசேரி உண்டியல் (மூன்றுமாத முதிர்வு கொண்டவை) | 150 | 400 |
| காசு | 2 300 | 300 |
| | 16 900 | 15 300 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (ரூ 100) | 13 000 | 12 000 |
| நிறுத்திவைத்த இலாபம் | 1 200 | 500 |
| வங்கிக்கடன் (நிலையான வட்டி செலுத்திப்படக்கூடியவை) | 1 000 | 600 |
| வியாபார சென்மதியாளர் | 800 | 600 |
| வருமான வரி ஏற்பாடு | 400 | 200 |
| சென்மதி செயற்பாட்டுச் செலவு | 500 | 1 400 |
| | 16 900 | 15 300 |

மேலதிக தகவல்கள்

1) இவ்வாண்டில் ரூபா 2400, 000 முன் கொணர்ந்த பெறுமானம் கொண்ட இயந்திரம் முடிவுறுத்தல் செய்யப்பட்டதுடன் முடிவுறுத்தல் செய்யப்பட்துடன் முடிவுறுத்தல் மீதான இலாபம் ஏனைய வருமானமாக காட்டப்பட்டுள்ளது.
2) விற்பனைகள் யாவும் கடனுக்கு மேற்கொள்ளப்படடதுடன் கொள்வனவுகளில் 60% கடனுக்கு செய்யப்பட்டதாகும்.
3) நிதிச் செலவுகள் என்பது இவ்வாண்டு வட்டிச் செலவீனம் ஆகும். எனினும் இறுதி சென்மதி செயற்பாட்டுச் செலவுகளில் ரூபா 100, 000 சென்மதி வட்டியையும் உள்ளடக்கியுள்ளன.
4) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான பெறுமானத் தேய்வு ரூ 600 000 ஆகும்.
5) இவ்வாண்டு கம்பனி இடைக்காலப் பங்குலாபக் கொடுப்பனவை மேற்கொண்டது. இவ்வாண்டு பிரேரிக்கப்பட்ட பங்குலாபம் ரூபா 1000, 000 ஆகும்.

வேண்டப்படுவது

1. LKAS – 07 இல் கூறப்பட்டவாறு நேர்முறையில் அமைந்த காசுப் பாய்ச்சல் கூற்று.

(15 புள்ளிகள்)

2. பின்வரும் கணக்கீட்டு விகிதங்கள் (31.03.2019 ல் முடிவடைந்த வருடத்துக்கு)
   1. கடன் விகிதம்
   2. வட்டிக் காப்பு விகிதம்
   3. உரிமை மீதான விளைவு விகிதம்
   4. விரைவு விகிதம்
   5. பங்கொன்றின் உழைப்பு.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk